## அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகம் - 2015

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பௌதீக ரீதியான இருப்பினை உறுதி செய்யாத ரூபா 67,004 தொகையான இருப்பொன்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சியிருந்த ரூபா 82,938 பெறுமதியான நுகர்வுப் பொருள் இருப்பொன்றின் பெறுமதி மீளாய்வாண்டின் செலவினமொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாடு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சலினை கணிப்பீடு செய்யும் போது திரண்ட இலாபத்திற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கமாக காட்டப்பட்டுள்ள ரூபா 16,381,888 பெறுமதியினுள் காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு தாக்கத்தை ஏற்படுத்தாத ரூபா 5,153,507 கூட்டுத்தொகையான சீராக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

மீளாய்வாண்டினுள் ரூபா 115,656 கூட்டுத்தொகையான சீராக்கங்களுக்குரிய நாட்குறிப்புப் பதிவுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 02 நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 80,295 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 265,832 தொகையான செலுத்தப்படாத சம்பளங்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 371 (2) | மீளாய்வாண்டினுள் 21 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 241,500 கூட்டுத்தொகையான முற்பணம் உரிய செயற்பாடுகள் முடிவடைந்து 01 முதல் 11 மாதங்கள் வரை தாமதமடைந்துள்ள போதிலும் அந்த முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 507 மற்றும் 756 | நிறுவகத்தின் 22 பிரிவுகளில் 13 பிரிவுகளுக்குரிய மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 | 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 81,500 கூட்டுத்தொகையான காலாவதியான வைப்புக்களை விடுவிப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 5.4.12 ஆம் அத்தியாயம் | ஒப்பந்த கொடுப்பனவுடன் மேற்கொள்ளப்படும் பெறுமதிசேர் வரித் தொகை தொடர்பான தகவல்கள் உரிய நிறுவனங்களுக்கு மாதாந்தம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 507,589 ஊக்குவிப்புப் படித் தொகையொன்று நிறுவகத்தின் பதவியணியினருக்கு மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 5/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 18,403,751 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 17,488,936 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 914,815 இனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் பற்றாக்குறை அதிகரிப்பது தொடர்பில் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 13,077,956 இனால் அதிகரித்திருந்ததை விஞ்சி நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா

8,745,094 இனாலும், சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஊழியர் நலன்கள் என்பன ரூபா 14,235,258 இனாலும் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் காணப்பட்ட பற்றாக்குறை 2012 ஆம் ஆண்டின் போது குறைவடைந்திருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை கிரமமாக அதிகரித்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டில் பங்களிப்பு அதிகரித்திருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது குறைவடைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டின் பங்களிப்பில் அதிகரிப்பு 42 சதவீதமாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கையின் பதப்படுத்தக்கூடிய மற்றும் பதப்படுத்த முடியாத உணவுப் பயிர்கள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் விவசாய உற்பத்திகளின் தயாரிப்பு பொதியிடல், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்றவற்றுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் அறுவடைக்குப் பின்னரான சேதங்களை குறைத்தல், மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் என்பன நிறுவகத்தின் நோக்கங்களாகும்.

மேற்படி நோக்கங்களை அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 யூலை முதல் 2015 யூன் வரையான 02 வருடகால சட்டகத்துடன் கூடியதாக அங்கீகரிக்கப்பட்டிருந்த சிறுநீரக நோயுடன் தொடர்புடைய பிரதேசங்களில் வாழும் மக்களின் உணவு முறைமை மற்றும் உணவு தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆய்வு 2016 மார்ச் 21 ஆந் திகதி அளவிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், 02 மாதங்களுக்கு ஒரு தடவை சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆய்வின் செயன்முன்னேற்றம் தொடர்பான செயன்முன்னேற்ற அறிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2014 திசெம்பர் மாதத்தில் முடிவுறுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட அரிசி சார்ந்த எக்ஸ்ருடட் பொருட்களின் உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் பிரபல்யப்படுத்தலுடன் (Development & Popularization of rice basic Extruded products) தொடர்புடைய ஆராய்ச்சி 2016 மே 24 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், 02 மாதங்களுக்கு ஒரு தடவை சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆராய்ச்சி தொடர்பான செயன்முன்னேற்ற அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீர்க்கூறகற்றல் மற்றும் உறைதல் நிலையின் கீழ் மரக்கறி மற்றும் பழங்களை பாதுகாத்தல் தொடர்பான ஆராய்ச்சிக்காக (Promotion of dehydration & freezing industry for fruits & vegetables) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 685,440 செலவிட்டு அதிகுளிரூட்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சிகளின் இறுதி பெறுபேற்றின் பிரகாரம் மரக்கறி மற்றும் பழங்களை அதி உறைநிலையில் வைத்துக்கொள்வதற்குரிய விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தனியார் துறை நிதியங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் தனியார் துறையிடையே பகிர்ந்து கொள்ளும் நடைமுறை மற்றும் ஒரு தரப்பினரால் நிகழ்த்தப்படும் உடன்படிக்கை மீறல்களின் போது செயற்பட வேண்டிய முறை

இருதரப்பினரிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பழங்களின் தோல்களை அகற்றும் தானியங்கி இயந்திரமொன்றினை திட்டமிட்டு அபிவிருத்தி செய்தலுடன் (Design & Development an Automated Fruit Peeler) தொடர்புடைய ஆராய்ச்சியை 2015 சனவரி முதல் 2016 யூன் வரை மேற்கொள்வதற்கு மதியுரைக் குழு அங்கீகரித்திருந்ததுடன், இயந்திரத்தை உருவாக்குவதற்குரிய அனைத்து திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததெனினும், எதிர்வரும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு தேவையான வசதிகள் வழங்கப்படாமையின் காரணத்தால் ஆராய்ச்சி 2016 பெப்ரவரி மாதத்தின் போது கைவிடப்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 61.6 மில்லியன் செலவிடப்பட்டு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இரசாயனகூடம் நவீனமயப்படுத்தப்பட்டிருந்ததுடன், சர்வதேச நியமங்களுக்கமைய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குத் தேவையான சான்றிதழ் (accreditation) பெற்றுக்கொள்ளப்பட்டிராத காரணத்தால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கான அங்கீகாரமொன்றினை பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது.

(எ) 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் பரிசோதனையின் போது விரிவாக்கல் பிரிவினால் பூர்த்தி செய்யப்படவேண்டிய 280 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 117 அல்லது 42 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) நிறுவனத்தினால் 2009 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளாக 05 புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆக்கவுரிமை சான்றிதழ்கள் பெறப்பட்டிருந்த போதிலும், அந்த புதிய கண்டுபிடிப்புகள் மூலம் விவசாய மற்றும் அறுவடைக்குப் பின்னரான துறையின் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்குப் வழங்கப்பட்டிருந்த பங்களிப்பு யாதென்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு முன்வைக்கப்படாத காரணத்தால் ஆராய்ச்சிகளின் முடிவுகள் ஆக்கவுரிமை சான்றிதழ்களைப் பெறுவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியொன்றின் முடிவாக வெற்றிகரமான தயாரிக்கப்பட்டிருந்த எக்ஸ்ட்ரூடர் வகையான எண்ணெய் உற்பத்தி இயந்திரம் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் வேறொரு நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த காரணத்தால் அந்த இயந்திரத்திலிருந்து எதிர்ப்பார்க்கப்பட்ட விளைவினைப் பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது.

(இ) ஆராய்ச்சி வழிகாட்டல்கள் கோவையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளுக்காக இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட 11 ஆராய்ச்சிகளுக்காக அந்த அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் 17 சந்தர்ப்பங்களின் போது விடுதிகளின் தங்கியிருந்த விருந்தினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 84,600 தொகை, மற்றும் 09 சந்தர்ப்பங்களில் விடுதிகளில் தங்கியிருந்த 09 நபர்களிடமிருந்தும் விடுதிக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,360,000 பெறுமதியான 16 ஐஸ்கிறீம் இயந்திரங்கள் தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

விவசாய அமைச்சரின் இணைப்பு உத்தியோகத்தரொருவரின் கோரிக்கையின் அடிப்படையில் நிறுவகத்திற்குச் சொந்தமான கெப் வண்டியொன்று 2015 மார்ச் 20 ஆந் திகதியிலிருந்து அந்த உத்தியோகத்தருக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் சாரதியின் சம்பளம் மற்றும் படிகள், எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவினமான ரூபா 870,075 கூட்டுத்தொகை நிறுவகத்தின் நிதியத்தினால் ஏற்கப்பட்டிருந்தது. மேலும் 2015 மார்ச் 20 ஆந் திகதி முதல் 2015 ஆக்ஸ்ட் 01 ஆந் திகதி வரை இந்த வாகனத்திற்குரியதாக எழுத்தப்பட்டிருந்த ஓட்டக்குறிப்புகள் வாகனத்தின் பொறுப்பை ஏற்று பயணஞ்செய்த உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்டிராததுடன், 2015 ஆகஸ்ட் 07 ஆந் திகதியின் பின்னர் ஓட்டக் குறிப்புக்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

**4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரசாயன ஆய்வுகூடத்தின் நவீனமயப்படுத்தலின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 44,041,725 பெறுமதியான உபகரணங்களில் ரூபா 27,311,650 பெறுமதியான உபகரணங்கள் ஆராய்ச்சிகளுக்காக பயன்படுத்தல் மீளாய்வாண்டினுள் 02 முதல் 08 மணித்தியாலங்கள் வரையான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், ரூபா 16,730,075 பெறுமதியான 02 இயந்திரங்கள் மீளாய்வாண்டினுள் எவ்வித செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசி உற்பத்திக் குடும்பங்களை உருவாக்குதல் மற்றும் அரிசி மா ஆலைகளை முன்னேற்றல் போன்ற செயற்திட்டங்களுக்காக 2012 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு உதவிச் செயற்திட்டமொன்றிலிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 110,900 பெறுமதியான 04 அரிசி மா ஷிப்டர் இயந்திரங்கள் 2016 ஆகஸ்ட் மாதமளவிலும் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புதிய மரக்கறி மற்றும் பழவகைகளின் நடமாடும் விற்பனைக் கூடங்களை அறிமுகப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2012 ஆம ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 350,000 பெறுமதியான 07 நடமாடும் விற்பனைக்கூடங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் நலிவுகள் நிறுவக தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஆராய்ச்சி கட்டுப்பாடு | நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளுக்காக ஆராய்ச்சி வழிகாட்டல்கள் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததுடன், ஆராய்ச்சி வழிகாட்டிகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | நிறுவகத்தின் பதவியணிக்காக முறையான பணிக் கையளிப்பொன்றினூடாக மனிதவளத்தினை முகாமை செய்தல் முறைமைப்படுத்தப்பட்டிராமை. |
| (இ) சொத்துக்கள் கட்டுப்பாடு | நிறுவகத்திற்குச் சொந்தமான பௌதீக வளங்கள் நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிராமை. |